DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 294 /2019

PROSECUTION WITNESS L.W.4 /P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | : மருதாச்சலம் | Caste | : |
| Father's Name | : சென்னியப்பன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 2எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜரில் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 22.11.2023.

**முதல் விசாரணை**

1) நான் KG வலசினில் குடியிருந்து கொண்டு கொத்தனராக பணிபுரிந்து வருகிறேன்.

2) 2007 ஆம் ஆண்டு வெங்கடாச்சலம் என்பவர் வீட்டிற்கு வேலைக்குச் சென்றேன். நான் வேலை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். வெங்கடாச்சலம் வீட்டின் சுவற்றை பக்கத்துவீட்டுக்காரர் உடைத்துவிட்டதாக சொன்னார்கள். அந்தப் பக்கத்து வீட்டுக்காரர்களை எனக்குத் தெரியாது. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:

அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

1. 18.06.2017 ஆம் தேதி நானும், இராமசாமியும் வெங்கடாச்சலத்தின் காம்பவுன்ட் சுவரை கட்டுவதற்காக சென்றோமா என்றால் ஆமாம். அப்போது வெங்கடாச்சலமும் அவரது மனைவி கலையரசியும் நாங்கள் வேலை செய்யும் இடத்தில் நின்று கொண்டிருந்தார்களா என்றால் வெங்கடாச்சலம் மட்டும் இருந்தார். கலையரசி வேலைக்குச் சென்றுவிட்டார். சிவன்மலை, அவரது மனைவி சரஸ்வதி அவரது மகன் பிரபு ஆகியோர் கடப்பாரையுடன் வந்து காம்பவுன்ட் சுவரை இடித்து கட்டக் கூடாது என சத்தம் போட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. அப்போது கலையரசியும், வெங்கடாச்சலமும் இடிக்கக் கூடாது என தடுத்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. அப்போது ஆஜர் 1,2 எதிரிகளும் 3 வது எதிரி பிரபும் தகாத வார்த்தையால் பேசி உன்னையும் குடும்பத்தையும் கொன்று புதைத்து விடுவோம் என மிரட்டினார்கள் என எனக்குத் தெரியாது.

2. நான் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.